ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 9 ஏப்ரல் 2004 கானம் : 9

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 101 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 7 |
| 4. | வேத கதைகள் - 82 | 10 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 72 | 12 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -76 | 15 |
| 7. | அப்யாஸம் - ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி | 16 |
| 8. | மாலே மணிவண்ணா - 19 | 18 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 20 | 22 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 103 | 27 |
| 11. | செய்திகள் | 30 |
| 12. | பகவன்நாமமேளா | 31 |


ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும்

— **ஸ்ரீ இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : சிவரஞ்சனி                    தாளம் : ஆதி

*பல்லவி*

***உனையன்றி எனக்கு புகலிடம் ஏது?***
***சரணமடைந்தேன் பாண்டுரங்கா (உனையன்றி)***

*சரணம்*

***தீனன் என்னிடம் க்ருபை செய்யவேண்டும்***
***கருமை நிறத்தோனே கருணையின் கடலே (கருமை)***

***முரளீதரனுக்கு ஹரியிடம் பக்தி***
***பிறவிதோறும் நிலைக்க பிச்சை கேட்கின்றேன்***
***(உனையன்றி)***

*நாமாவளி*

***பாண்டுரங்க பாண்டுரங்க பாண்டுரங்க பாண்டுரங்க***
***புகலிடம் நீயே பாண்டுரங்க பாண்டுரங்க***

**ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலத்திலிருந்து**
**ஒரு முக்கிய அறிவிப்பு**

நமது ஸாந்தீபனி குருகுலத்தில் வரும் 2004-2005 வருடத்திற்கு ஸாமவேத வித்யார்த்திகள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

யஜுர்வேதத்திற்கு, இந்த வருடம் வித்யார்த்திகள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

- Trustees

**Sri Sandeepani Gurukulam**

**101**

ஈரோட்டை அடுத்துள்ள வெள்ளக்கோவில் என்ற ஊரில் உள்ள ஸ்ரீ சோழீஸ்வர் திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, நாம மஹிமையைப் பற்றி மூன்று நாட்கள் உரை நிகழ்த்தினார்கள். வெள்ளக்கோவிலில் உள்ள பெருமாள்கோயிலில் ஏற்கனவே ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. திரு. நாராயணஸ்வாமி, திரு. மாதேசன், திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியவர்கள், கூட இருந்து ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விஜயத்திற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். கணபதி ஆயில் மில்ஸ் அதிபர் திரு. குணசேகரன் அவர்கள் வீட்டில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி தங்கியிருந்தார்கள்.

மேட்டுப்பாளையம் என்ற ஊரிலும் மஹாமந்திர நாமகீர்த்தனம் ஆரம்பித்து நடந்து வருவதால் அங்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி சென்று இருந்தார்கள். அவ்விடத்தில், கொங்கு வேளாளர் பள்ளியின் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் கூடியிருந்தார்கள். அவர்களிடையே ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி உரையாற்றினார்கள். பிறகு, அருகில் உள்ள கஸ்தூர்பா கிராமத்தில் உள்ள ஆஸ்ரமத்திற்கு விஜயம் செய்தார்கள். சற்று ஏறக்குறைய நூற்று அறுபது குழந்தைகள் அங்கு பயில்கின்றனர். அவர்கள், ஆதரவு அற்றவர்கள்; எல்லோரும் பெண் குழந்தைகள். அவர்களைப் பார்த்தவுடன் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி மிகவும் நெகிழ்ந்துவிட்டார்கள்.

''இந்த குழந்தைகளுக்கு உணவு, உடை, கல்வி, இடம் எல்லாம் ஏதோ ஒருவிதத்தில் நாம் கொடுத்துவிடுகின்றோம். இவர்களுக்கு அன்பை யார் கொடுப்பார்கள். தாய், தந்தையர் இல்லாத இவர்களுக்கு நாம் நம்முடைய அன்பை காண்பித்து, அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும்'' என்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி சொன்னார்கள்.

பசி உள்ளவனுக்கு உணவு இட வேண்டும், ஏழைக்குப் பொருள் கொடுக்க வேண்டும், வியாதி உள்ளவனுக்கு வியாதியை போக்க வேண்டும். துயரப்படுபவனுக்கு துயரத்தைப் போக்க வேண்டும். பிஞ்சு உள்ளங்களுக்கு அன்பை கொடுக்க வேண்டும். சிறு வயதில் யாருக்கு அன்பு கிடைக்கவில்லையோ அவர்கள்தான் பிற்காலத்தில் சமூக விரோதமான செயல்களிலும், வன்முறையிலும் ஈடுபடுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒய்வு பெற்ற தம்பதிகளான திரு. C.S. ராமகிருஷ்ணன், திருமதி. ராமகிருஷ்ணன் இருவரும் இந்த குழந்தைகளை தங்கள் குழந்தைகளாகவே நினைத்து அன்பு செய்வது போற்றத்தக்கது.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, வடுகம்பட்டியில் உள்ள திருமதி. மாலதி ராஜேந்திரனுடைய பள்ளிக்கு விஜயம் செய்தார்கள். அந்த பள்ளி, ரவீந்திரநாத்தாகூர் அவர்கள் ஆசைப்பட்டபடியும், J.K. அவர்கள் ஆசைப்பட்டது போலவும், நல்ல இயற்கை சூழலில் அமைந்திருப்பது, பார்ப்பதற்கே ரம்யமாக இருந்தது. அந்த குழந்தைகள் அனைவரும், பகவத்கீதை, பஜனை, தியானம் என்பதோடு மட்டும் அல்லாமல் ஒழுக்கத்துடன் கல்வி கற்று வருவது அறிந்து ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள்.

ஈரோடு திரு. பத்மநாபன், திரு. துரை, திரு. வெங்கட்ரமணி அவர்களுடன் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, பல ஸ்தாபனங்களுக்கும் மற்றும் பல அன்பர்களுடைய இல்லங்களுக்கும் விஜயம் செய்தார்கள். திரு. துரையும், திரு. பத்மநாபனும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகளை எல்லோரும் கேட்டு பயன் அடைய தீவிரமாக முயற்சி எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. திரு. துரை, டாக்டர் திரு. ராஜமாணிக்கம் அவர்களை சொற்பொழிவுக்கு அழைத்து வந்திருந்தார். அவர், திருவருட்பிரகாச வள்ளலாரைப் பற்றி பேசிய விஷயங்களை கேட்டு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அகம் மகிழ்ந்தார்கள்.

வெள்ளக்கோவில் சொற்பொழிவு முடிந்தவுடன் 26-2-2004 அன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, மதுரையில், திரு. ராஜுசெட்டியார் ஏற்பாடு செய்திருந்த ஒரு மண்டல 'யோகிராம்சுரத்குமார் ...' நாம வேள்வியின் பூர்த்தியில் கலந்துகொண்டார்கள். அன்று மாலை கோவில்பட்டியில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரை ஏற்பாடாகியிருந்தது. ஆர்ஷ வித்யாபீடம்-கோவில்பட்டியின் நிறுவனர்-ரிஷிகேஷ்

தயானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் சீடர் ஸ்வாமி ததேவானந்தா அவர்கள், ஸ்ரீ ஸ்வாமிஜியின் சொற்பொழிவுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, முதலில் ஆர்ஷ வித்யா பீடத்திற்கு விஜயம் செய்து, பிறகு உரை நிகழ்த்தினார்கள். திரளான பக்தர்கள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருள் உரையை கேட்டு மகிழ்ந்தார்கள்.

மறுநாள், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி தூத்துக்குடி சென்றார்கள். அங்கு ஊர் முழுவதும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் வருகை தெரிவிக்கப்பட்டிருந்தது. பந்தல் போட்டு, வாழை மரம், தோரணங்கள், வளைவுகள் எல்லாம் கட்டி ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

திரு. கதிரேசன், திரு. ரவி, திரு. பாண்டியன் மூவரும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் வரவிற்கு விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். மூன்று நாட்களுக்கு மாலையில் ஸ்ரீ சங்கர ராமேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி உரை நிகழ்த்தினார்கள். முதலில், ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு கோவில் சார்பில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு கொடுக்கப்பட்டது. தினமும், சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்திருந்து ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரையை கேட்டு மகிழ்ந்தார்கள்.

திருக்கோவிலூர் தபோவனம் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், திருவண்ணாமலை ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் ஆகியோரிடம் பக்தி பூண்டு, குருபக்திக்கு சான்றாக விளங்கும் Agsar Group அதிபர் திரு. க்ருபாகரமூர்த்தியின் அழைப்பின் பேரில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி Agsar பெயிண்ட் நிறுவனத்திற்கு விஜயம் செய்து அருளுரை வழங்கினார்கள். அதன் ஊழியர்களுக்கு பிரசாதம் கொடுத்தார்கள். தூத்துக்குடியில் உள்ள பல கோவில்கள் மற்றும் பள்ளிகளுக்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார்கள். அதில், மீனவர்கள் வாழும் பகுதியில் திரு. பிரதாப் சிங் என்பவர் ஒரு சிறு பள்ளிக்கூடம் நடத்தி வருகின்றார். ஸ்வாமி விவேகானந்தருடைய பெயரில் நடந்து வரும் அந்த பள்ளிக்கு அடிப்படை வசதிகள் கூட இல்லை. ஆனால், அந்த பள்ளி நிறுவனரோ வீதியில் காகிதம் பொறுக்கி வாழ்க்கை நடத்தும் இளம் சிறார்களையும், சிறுமிகளையும் அழைத்து வந்து, உணவு, உடை, இடம் கொடுத்து அவர்களை கல்வி கற்க வைக்கின்றார்கள். அவர்கள், இறைவழிபாடு பாடல்களைப் பாடுவதைக் கேட்டு

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. தூத்துக்குடியில் Port Trust பெருமாள் கோவில், SPIC Nagar பாலாம்பிகை கோயில், புது கிராமம் பெருமாள் கோயில், ஷண்முகபுரம் அம்மன் கோவில் ஆகிய கோவில்களுக்கும், சக்தி விநாயகர் பள்ளி, சின்னமணி பள்ளி ஆகிய பள்ளிக்கூடங்களுக்கும், மேலும் பல ஸ்தாபனங்களுக்கும், பக்தர்களின் இல்லங்களுக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார்கள். திரு. K.S.P.S. கண்ணன் அவர்கள் இல்லத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேற்க யானையை வரவழைத்திருந்தார்கள்.

தூத்துக்குடியில் நடைபெற்ற ராதாகல்யாண மஹோத்ஸவத்திலும், கலந்துகொண்டார்கள். ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி சென்ற இடங்களில் எல்லாம், கூடியிருந்த பக்தர்கள் அனைவரும், ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் செய்தது ஆனந்தமாக இருந்தது. பிப்ரவரி 28-ந் தேதியன்று, தூத்துக்குடி அருகில் உள்ள குலையன்கரிசல் என்ற கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பக்தரான திரு. முருகேசன் அவர்கள் மிகவும் விமர்சையாகவும், சிரத்தையாகவும் செய்திருந்தார்கள். அங்கு குழந்தைகள் உட்பட கிராம மக்கள் அனைவரும் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தார்கள்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, மழை வேண்டி ஆங்காங்கே அகண்ட நாம ஸங்கீர்த்தனம் செய்து வரச் சொல்கின்றார்கள். சென்னையிலும், 'யோகிராம்சுரத்குமார்... ஜெயகுருராயா' ஒரு மண்டல நாமவேள்வி ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு பல இல்லங்களில் நடந்து வருகின்றது. வடலூர் ஸ்ரீ ராமலிங்கவள்ளலார், நீரினால் விளக்கெறியச் செய்தார் என்பதும், அதுபோல், ஷீரடி மஹாத்மாவும் செய்தார் என்பதையும் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். பம்மல் ஸ்ரீ ஸ்வாமிநாதன் வீட்டில் யோகிராம்சுரத்குமார் நாம வேள்வி நடந்து வருகையில், அங்கு இருந்த அன்பர் பகவானின் பாதுகைக்கு அபிஷேகம் செய்த நீரை எண்ணெய் என்று தவறாக நினைத்து விளக்கில் விட, விளக்கும் அணையாமல் மூன்று மணிநேரம் எரிந்தது, நாமத்தின் மஹிமையை நமக்கு நிதர்சனமாக உணர்த்துவதாக அமைந்தது. (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : பூஜையே நடக்காமல், புதர் மண்டி சிதிலமடைந்திருக்கும் ஆலயங்களுக்கு மனமுவந்து சிலர் முன்வந்து திருப்பணி செய்விக்க வருகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு சில துன்பங்களும், இடர்பாடுகளும் ஏற்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால் சிலர் மரணமடைந்தும் விடுகின்றனர். இந்த திருப்பணியில் ஈடுபட்டதால்தான் இப்படி நடந்தது என்று சொல்கின்றார்களே! இது உண்மையா! அல்லது தற்செயலாக நடந்த ஒன்றா?*

பதில் : அப்படி ஈடுபடுபவர்களுக்கு சில இடர்பாடுகளும், துன்பங்களும் நேரிடுவது உண்மைதான். இது தற்செயலாக நடைபெறும் நிகழ்வு இல்லை.

*கேள்வி : கவனிப்பார் அற்று இருக்கும் கோவிலுக்கு ஒருவர் மனமுவந்து திருப்பணி செய்ய முன்வரும்பொழுது, அவர்களுக்கு நன்மைகள் ஏற்படாவிட்டாலும், இதுபோன்ற இடர்பாடுகள் ஏற்பட காரணம் என்ன?*

பதில் : நம் வீட்டிலே, நம்மைப் பெற்று, வளர்த்து எல்லா விதங்களிலும் நம் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட பெற்றோர்கள் இருக்கின்றார்கள். அவர்களை கவனித்துக்கொள்வது ஒரு மகனின் கடமையல்லவா? சில நாட்கள், அவர்களுக்கு உணவளிக்காமல், அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை கொடுக்காமல், அவர்களுக்கு தேவையானவற்றைச் செய்யாமல், அவர்களை அலக்ஷியப்படுத்திவிட்டு, திடீரென்று ஒருநாள் அவர்களிடம் சென்று, ‘உங்களுக்கு என்ன வேண்டும்?’ என்று கேட்டால், மானமுள்ள அவர்களுக்கு இத்தனை நாட்கள் தங்களை அலக்ஷியப்படுத்தியதை நினைத்து முதலில் கோபம்தானே வரும்.

ஒவ்வொரு கிராமமும், நகரமும் இன்று செழிப்புடன் இருப்பதற்கு அந்தந்த கிராமங்களிலும், நகரங்களிலும் கோவில் கொண்டுள்ள தெய்வங்களே காரணம். அதுபோல், ஒவ்வொரு

குடும்பமும் துன்பமில்லாமல் வாழ்வதற்கு அந்தந்த குடும்பங்களின் குலதெய்வங்களே காரணம்.

அந்த தெய்வங்களையெல்லாம் நாம் சில காலம் கவனிக்காமல் பட்டினி போட்டுவிட்டு, திரும்பிப் பார்க்காமல் இருந்துவிட்டு ஒரு நாள் திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டு, ''இதை செய்கிறேன்'', ''அதை செய்கிறேன்!'' என்று கிளம்பினால், அந்த தெய்வத்திற்கு கோபம் வருவது நியாயம்தானே! அதனால்தான் இப்படி ஏற்படுகின்றது.

*கேள்வி : அப்படியென்றால் இந்த கோவில்களுக்கு எல்லாம் எப்படி திருப்பணி செய்வது?*

பதில் : மஹான்களான இறைவனுடைய அடியார்களிடம் இறைவனுக்கு கோபமே வராது. அவர்களை முன்வைத்துக்கொண்டு நாம் திருப்பணிகளைச் செய்வோமானால் திருப்பணி செவ்வனே நடைபெறும்.

*கேள்வி : நான் வசிக்கும் கிராமத்தில் சமீபத்தில் சிலர் கிறிஸ்துவர்களாக மாறிவிட்டார்கள். இதையெல்லாம் எப்படி தடுப்பது?*

பதில் : கிராமம் கிராமமாக, அதுவும் குறிப்பாக சமுதாயத்தினால் பலவிதத்திலும் அலட்சியப்படுத்தப்பட்டவர்கள் வாழும் இடங்களில் சென்று நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும். புதியதாக கோவில் கட்டுவதால் மட்டும் பக்தி பிரச்சாரம் நடக்காது. புதியதாக சன்னதிகளை ஏற்படுத்துவதால் மட்டும் பக்தி பிரச்சாரம் நடக்காது.

தெய்வங்களுக்கு தங்ககவசம், வெள்ளிகவசம், வைர நகைகள் இவைகளை சாற்றுவதால் மட்டும் மதத்தை காப்பாற்றிவிட முடியாது. தெய்வங்களுக்கு வெள்ளிப் பல்லக்கு, தங்கப் பல்லக்கு செய்வதால் பக்தி பிரச்சாரம் நடக்காது. இதில் செலவழிக்கும் அத்தனை பொருட்செலவும், துளசி மாலைகளாகவும், கோபிசந்தனமாகவும் மாறி கிராமம் கிராமமாக சென்று ஒவ்வொருவருக்கும் தரப்பட வேண்டும். நாமப்பிரச்சாரம் செய்வதற்கு செலவழிக்க வேண்டும்.

கிறிஸ்துவ பாதிரிமார்கள், புகழுக்கோ, பெருமைக்கோ ஆசைப் படாமலும், தன்னை முன்னிலைப் படுத்திக்கொள்ள ஆசைப்படாமலும்,

சப்தமே இல்லாமல் காதும் காதும் வைத்தாற்போல் தந்திரமாக கிராமம் கிராமமாக சென்று அவர்களுடைய மதத்திற்கு எப்படி எல்லோரையும் மாற்றுகின்றார்களோ, அதற்கு சற்றும் குறையாத தியாகபுத்தியுடன், சளைக்காமல், நம் மதத்தை சேர்ந்தவர்களும் ஈடுபட வேண்டும். ஒருவன் எவ்வளவுதான் உழைத்தாலும், அந்த உழைப்பு சரியான திசையை நோக்கி இல்லாமல் இருந்தாலும், இந்த காலகட்டத்திற்கு பொருந்துவதாக இல்லாமல் இருந்தாலும் அது தகுந்த பலனை தராது.

---


ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# வேத கதைகள் - 82

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

### உபசது

தேவர்களும், அரக்கர்களும், மூன்று உலகமும் தங்களைத் தான் சார்ந்தது என்று போர் புரிந்தனர். அப்பொழுது, இந்த மூன்று உலகங்களையும் மதில்களால் சூழப்பட்டதாக செய்தனர். எவ்விதம், உயர்ந்த அரசர்கள் அதிகமான வலிமையாலும், சக்தியுடன் கூடினவர்களாக, அதிகமாக படைகளின் வலிமையோடு கூடினவர்களாக பெரிய மதில்களை எழுப்புகிறார்களோ, அவ்விதம் இவர்களும் செய்தனர். அதில், இந்த பூமியை இரும்பு மயமான மதிலாக செய்தனர். அந்தரிக்ஷலோகத்தை வெள்ளி ப்ராகாரத்தால் சூழப்பட்ட பட்டணமாக செய்தனர். த்யூலோகத்தை தங்க ப்ராகாரத்தால் சூழப்பட்ட பட்டணமாக செய்தனர். அப்பொழுது, தேவர்கள் ஒருவருக்கொருவர் விசாரம் செய்தனர்.

''அரக்கர்கள் இந்த மூன்று உலகங்களையும் தங்கள் பட்டணங்காக செய்துகொண்டனர். ஆதலால், நாமும் இந்த மூன்று பட்டணங்களையும் நம்முடையதாக செய்துகொள்வோம். அரக்கர்களுக்கு துன்பம் ஏற்படுத்துவோம்'' என்று விசாரம் செய்து, மூன்று உலகங்களிலும் ஒரு குறிப்பிட்ட இடங்களில் தங்களுக்காக பட்டணங்களை படைத்தனர்.

இவ்விதம், தேவர்களும் சத: என்று ஒரு இடத்தை தங்களுக்காக ஏற்படுத்திக்கொண்டனர். அந்த சத: என்ற இடத்தை அரக்கர்களுக்கு பிரதிகூலமாக அவ்விதம் அந்தரிக்ஷலோகத்தில் ஆக்னீத்ரம் என்ற இடத்தையும், த்யூலோகத்தில் அவிர்தானம் என்ற இரண்டு வண்டிகளையும் அரக்கர்களுக்கு பிரதிகூலமாக செய்தனர். அரக்கர்களால் மூன்று உலகங்களிலும் பெரிய மதில் எழுப்பியபோது தேவர்களும் தங்கள் பாதுகாப்பிற்காக சதஸ் முதலிய மூன்று மதில்களை எழுப்பி வெற்றி பெற்றனர். எவ்விதம் வெற்றி பெற்றார்கள் என்பது பின்வருமாறு கூறப்படுகிறது.

''உபசது என்ற ஹோமங்களைச் செய்வோம். உலகங்களிலும், விரோதிகளின் கோட்டைகளுக்கு அருகில் இருந்துகொண்டு, பெரிய சேனையைக்கொண்டு முற்றுகை இடுவதால் வெற்றி பெறுகிறார்கள். ஆதலால், நாமும் வெற்றி பெறுவதற்கு உபாயமான ஹோமங்களைச் செய்வோம்'' என்று விசாரித்து மூன்று உபசத்துக்களை செய்து மூன்று கோட்டைகளிலிருந்து அரக்கர்களை வெளியேற்றினர். போரினால் அரக்கர்கள் எழுப்பிய கோட்டைகளை கைப்பற்ற முடியாமல் ஹோமங்களை செய்து வெற்றி பெற்றனர். அப்பொழுது கோட்டைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட அரக்கர்கள், வசந்தம் முதலிய ருது தேவர்களை சரணமடைந்தனர். தேவர்கள் உபசது ஹோமம் செய்து அங்கிருந்து அவர்களை விரட்டினர், பிறகு, அரக்கர்கள் மாஸ தேவர்களை சரணமடைந்தனர். தேவர்கள், அரக்கர்களை ஹோமத்தால் அங்கிருந்து விரட்டினர். பிறகு, அரக்கர்கள் அர்தமாஸ தேவர்களை சரணம் புகுந்தனர். அங்கிருந்தும் விரட்டப்பட்டனர். பிறகு அரக்கர்கள் அஹோராத்ர தேவர்களை சரணம் புகுந்தனர். அங்கிருந்தும் விரட்டப்பட்டனர். இந்த உபசது ஹோமங்கள் தேவர்களின் வெற்றிக்கு காரணமாக இருந்ததால் ஜிதய: என்று பெயர் ஏற்பட்டது.

அசுரர்களோடு போர்புரிய முயற்சி செய்த தேவர்கள் தங்களுக்குள் விரோதம் இல்லாமலிருக்க தங்களுக்குள் தலைமைப் பதவியில் பயந்தனர். நமக்குள் ஒற்றுமை இல்லாவிடில் அதைத் தெரிந்துகொண்டு அரக்கர்கள் நம் ராஜ்யத்தைக் கவர்ந்து விடுவார்கள் என்று ஆலோசித்து வசுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் இந்த கூட்டத்தினர் அக்னி, இந்திரன், வருணன் இவர்களோடு மந்திர ஆலோசனை செய்தனர். பிறகு தேவர்கள், நமக்குப் பிரியமான மனைவி, மக்கள் யாவரையும் வருணனுடைய வீட்டில் கைதிகளாக வைப்போம் என்று தீர்மானித்து அவ்விதம் செய்தனர். அதனால், தேவர்களுக்கு ஒற்றுமை ஓங்கியது. அரக்கர்களையும் தோற்கடித்து வெற்றியும் பெற்றார்கள். இந்த வரலாறு ரிக்வேதத்தைச் சார்ந்த ஐதரேய பிராமணம் என்ற நூலில் இருக்கிறது. இதே விபரம் தைத்திரிய பிராமணத்திலும் இருக்கிறது.

# எந்தரோ மஹானுபாவுலு - 72

மஹாப்ரபுவின் கீர்த்தியினாலேயே பொறாமை அடைந்த விரோதிகள் அவருக்கு இடையூறு விளைவிக்க உரிய சந்தர்ப்பத்தை தேடினர். இப்படிப்பட்ட விரோதிகளையும் நல்வழிப்படுத்தவே ப்ரபுவும் சீக்கிரம் ஸன்யாஸம் பெற விரும்பினார். அவருக்கு தன் விரோதிகளை உத்தாரணம் செய்து ஹரியின் சரணங்களை அடைவிக்க தீவிரமான இச்சை ஏற்பட்டது.

ஒரு நாள், ப்ரபு, பக்தர்களுடன் கங்கா ஸ்னானத்திற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் அவரது சில விரோதிகள், அவர் காது பட அவரை தூஷித்தனர், ப்ரபு, உரக்கச் சிரித்துக்கொண்டே ''பிப்பலக் கனியை இரண்டாக்கியது ரோகம் தீருவதற்குத் தான். ஆனால், பயன் விபரீதமாகிவட்டது. ரோகம் தீராமல் அதிகமாகிவிட்டது என்று கூறினார். ப்ரபுவின் வசனங்களின் அர்த்தம், பக்தர்களுக்குப் புரியவில்லை. நித்யானந்தர் மட்டும் ப்ரபு எதையோ சூசகமாக உணர்த்துகிறார் என்று புரிந்துகொண்டு தனிமையில், ''ப்ரபோ! தாங்கள் இப்போதெல்லாம் புதிராக இருக்கிறீர்கள்? எதையோ மறைத்துப் பேசுகிறீர்கள் என்ன காரணம்?'' என வினவினார்.

ப்ரபுவும், ''ஸ்ரீபாத்! உங்களிடம் என்ன ஒளிவு மறைவு? நீங்கள் என்னுடைய வெளியில் இருக்கும் ப்ராணன் அல்லவா? நான் என் நிலையில் இல்லை. நான் இனி பரிவ்ராஜக தர்மத்தை ஏற்று என்னிடம் த்வேஷம் கொண்டவர்களையும் அன்பினால் வெல்வேன். என் பக்தர்கள் செய்யும் பூஜையையும், என் அழகையும் பார்த்து பொறாமை கொண்டவர்கள், இனி என் ஸன்யாஸ கோலத்தையும் வீடு வீடாக நான் பிச்சை எடுத்து உண்பதையும், சுருள் சுருளாக கருங்கூந்தலை மழித்து மொட்டை அடித்த என் தலையையும் பார்த்து வருந்தி நல்ல வழியில் நடப்பார்கள். எந்த விதமான காணிக்கையையும் நான் ஏற்கமாட்டேன். நீயே ஸன்யாஸி! தியாகி! ஆகவே, என் முடிவில் எந்தவிதமான தடையையும் ஏற்படுத்தாதே'' என்றார்.

இதைக்கேட்ட நித்யானத்தர் சோகத்தில் உறைந்துபோனார். அழுதுகொண்டே அவர், ''ப்ரபோ! நீங்கள் ஸர்வஸமர்த்தர்!

உங்களைத் தடுக்க நான் யார்? ஆனால், பக்தர்கள் இல்லாமல் நீங்கள் எப்படி வாழ்வீர்கள்! ஹா! ஹா! விஷ்ணுப்ரியாவின் கதி என்ன? வயதான சசீமாதா என்ன செய்வாள்? உங்கள் நினைவிலே உயிரைத் தியாகம் செய்வாள். அவளது அந்திம ஆசை கூட நிறைவேறாது. ப்ரியமான புத்திரன் கையால் தஹன காரியம் பெற்றுக்கொள்ளும் பாக்யத்தை இழப்பாள்! ப்ரபோ! அன்னை நீங்களில்லாமல் உயிர் வாழமாட்டாள்!'' என்று சொன்னர். ப்ரபு உடனே, ''ஸ்ரீபாத்! நீங்கள் பரம ஞானி. எல்லாப்பிராணிகளும் அவரவர் கர்மவசப்பட்டவர்கள். யாருக்கு யாருடன் எத்தனை நாட்கள் சம்பந்தம் உண்டோ அத்தனை நாட்கள்தான் கூட இருப்பார்கள். ப்ராரப்த வசப்படிதான் எல்லாம் நடக்கும்!'' என்றார். நித்யானந்தர் மௌனமானார்.

பிறகு, முகுந்ததத்திடம் ப்ரபு சென்றார். முகுந்ததத் இனிமையான குரல்வளமுடையவர். ப்ரபு, அவர் கீர்த்தனங்களை ரசித்துக் கேட்பார். ப்ரபுவைப் பார்த்தவுடன் முகுந்ததத் வணங்கி ஆசனம் அளித்தார். ப்ரபு, அவரைப் பாடச் சொன்னார். உரத்த குரலில் அவர் பாட, ப்ரபு ப்ரேமையில் மூழ்கி முகுந்ததத்தை ஆலிங்கனம் செய்துகொண்டு, ''முகுந்த, இனி இப்படிப்பட்ட பாடலை எப்படிக் கேட்பேன்'' என்று தழுதழுக்கக் கூறினார். ஆச்சர்யத்துடன் முகுந்ததத், ''ஏன் ப்ரபோ! நான் உங்கள் சேவகன்! நீங்கள் ஆக்ஞை இட்டால் உடனே பாடுகிறேன்'' என்றார்.

ப்ரபு கண்ணீர் பெருக ''முகுந்த! நான் இனி நவத்வீபத்தை த்யாகம் செய்து முடியை மழித்து காஷாயம் தரித்து வீடுவீடாக பிக்ஷைபெற்று கோவிலிலோ பாழடைந்த குடிசையிலோ வசிக்கப் போகிறேன். வீட்டைத் துறந்து பைராகி ஆகப்போகிறேன்'' என்றார்.

இடி விழுந்தாற்போலிருந்தது முகுந்ததத்திற்கு. மூர்ச்சித்து விழுந்துவிட்டார். சிறிது நேரம் கழித்து குலுங்கி குலுங்கி அழுது கொண்டே, ''ப்ரபோ! ஏனிப்படி ஹ்ருதயத்தைப் பிளக்கும் சொற்களைப் பேசுகிறீர்கள்! இதற்காகவா இப்படி ஸ்னேஹத்தை வளர்த்தீர்கள்! இப்படி செய்வதற்காகவா எங்களை அன்புடன் ஆலிங்கனம் செய்து, கூட அமர்ந்து உண்டு, ஏகாந்தத்தில் ப்ரேம ரஹஸ்யங்களை பரிமாறி, ப்ரேமபாசத்தில் கட்டுண்ணப்

பண்ணினீர்கள்! எங்களது வாழ்விற்கு ஒரே ஆதாரமான நீங்களின்றி இந்த நவத்வீபத்தில் நாங்கள் எப்படி வாழ்வோம்? உங்கள் கமல முகத்தைக் காணாமல் நாங்கள் உயிர் வாழ முடியுமா? தயவுசெய்து எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள்! நீங்கள் எடுத்த முடிவு நிச்சயம்தானா?'' என்று கெஞ்சினார்.

ப்ரபு, அழும் முகுந்தனை அணைத்துக்கொண்டு அவரது வெப்பமான கண்ணீரைத் துடைத்துவிட்டு, ''முகுந்த! இப்படி அதைரியப்படலாமா? உன் அழுகையால் என் ஹ்ருதயம் வெடிக்கும் போலுள்ளது. நான் உன்னைவிட்டுப் பிரிய மாட்டேன்! நீ என்றும் என் இதயத்தில் இருப்பாய்!'' என்றார். பிறகு, மற்றொரு பக்தரான கதாதரன் வீட்டிற்குச் சென்றார் ப்ரபு.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- மதுரமுரளி சந்தா தொகையை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும்.
- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.

# பாலர்களுக்கு ஒரு கதை - 76

ஒரு கற்றறிந்த பண்டிதர், அந்த தேசத்தை ஆண்டு வந்த அரசனுடைய ஸபையில் ராஜ பண்டிதராக பதவி வகித்து வந்தார். அரசருக்கு அந்த பண்டிதரிடம் கௌரவ புத்தி உண்டு. ஒரு நாள், அரசர், அந்த பண்டிதரை அவசரமாக தன்னைப் பார்க்க வருமாறு கூப்பிட்டு அனுப்பினார். அந்த சமயமாகப் பார்த்து, எப்பொழுதும் இவருக்கு உதவிக்கு வரக்கூடிய பையன் வெளியூர் சென்றிருந்தான். அரசனுடைய அழைப்பைத் தட்டவும் முடியாது. தள்ளிப் போடவும் முடியாது. ''என்ன செய்வது?'' என்று அவர் யோசித்துக்கொண்டு இருக்கையில் வீதியில் ஒரு பையன் சென்றுகொண்டிருந்தான்.

இவருக்கு உதவியாளனாக இருக்க அவனுக்கு எந்த தகுதியும் கிடையாது. இருந்தபோதிலும் அவசரத்திற்குப் பரவாயில்லை என்று அவனை அழைத்து அவனுக்கு நல்ல உடைகள் எல்லாம் கொடுத்து, நன்றாக அலங்காரம் செய்து, தன்னுடைய உதவியாளனாக அழைத்துச் சென்றார். செல்லும் வழியில் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்துக்கொண்டே வந்தார். இதுநாள் வரை, அவன் அரண்மனையை பார்த்ததே கிடையாது. அரண்மனையை வெளியிலிருந்துப் பார்த்தே பிரமித்துவிட்டான். உள்ளே சென்று தர்பார் மண்டபத்தில் இருக்கும் மன்னரைப் பார்த்து அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவனால், இதையெல்லாம் நம்பவே முடியவில்லை. ''நடப்பது எல்லாம் என்ன கனவா? அல்லது நினைவா?'' என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கையில், அடுத்த அதிசயம் நடந்தது. அரசர், பண்டிதருக்கு வணக்கம் செலுத்திவிட்டு இவனுக்கும் வணக்கம் செலுத்தினார். பண்டிதர் கிளம்பும்பொழுது, மன்னர் அவருக்கும் மரியாதை செய்து கூடவந்திருந்த இவனுக்கும் மரியாதை செய்தார். அரசன், ''இவன் யார்?'' என்று விசாரிக்கவும் இல்லை. இவனுடைய தகுதியைப்பற்றியும் கேள்வி கேட்கவுமில்லை. அரசருக்கு பிரியமான, பழக்கமான பண்டிதருடன் வந்த ஒரு காரணத்தினாலேயே இவனுக்கு எப்படி மரியாதையும் சன்மானங்களும் கிடைத்தது பார்த்தீர்களா!

அதுபோல், நமக்கு எந்த தகுதியும் இல்லாவிட்டாலும் கடவுளுடைய பிரியத்திற்கு பாத்திரமாகி அவரை நேரில் பார்த்து பேசக்கூடிய ஒரு குருவை அடைந்துவிட்டால் போதும். அவருடைய சிஷ்யர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவே எந்த தகுதியும் பார்க்காமல் பகவான் நமக்கு அருள் செய்துவிடுவான்.

# அப்யாசம்

**– ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஒருவனுக்கு பாதாம் அல்வா என்றால் மிகவும் பிடிக்கும் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு, அந்த பாதாம் அல்வாவைப் பற்றி கேள்விப்பட்டாலோ, அதனுடைய வாசனையை முகர்ந்தாலோ, அல்லது அதை நேரில் பார்த்தாலோ, அவனால் அதை சாப்பிடவேண்டும் என்ற ஆவலை அடக்க முடியாது. இவை எதுவும் இல்லாமல், தனிமையில், ஏதாவது ஒரு மலையில், யாரும் வராத இடத்தில் அமர்ந்தாலும் திடீர் என்று அவனுக்கு பாதாம் அல்வா சாப்பிட வேண்டும் என்ற ஆசை மனதில் தீவிரமாக எழும். அப்பொழுது அவனால் அதை அடக்கவே முடியாது.

இதற்குக் காரணம், பலமுறை அவன் அதை சுவைத்து சாப்பிட்டிருப்பதால், அந்த ஆசை ஒன்றே வாசனையாக மாறியுள்ளது. அவன், பாதாம் அல்வாவை சாப்பிட்டுவிட்டால், அந்த ஆசை முழுவதும் தணிந்து விடும் என்று நினைப்பது தவறு. அது அந்த நேரத்திற்கு மட்டும்தான் தணியும்.

ஆனால், மீண்டும் மீண்டும் அந்த ஆசை அவ்வப்பொழுது தலைத்தூக்கிக்கொண்டுதான் இருக்கும். சில சமயங்களில், அவன் முன்பாக பாதாம் அல்வா இருந்தும் அவனுடைய மனதில் அதை சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும், கை அவனை அறியாமல் அதை எடுத்து வாயில் போட்டுக்கொள்ளும். மனது, அவன் செய்யக்கூடிய காரணத்தை நியாயப்படுத்தும். ‘‘இதுபோல், இன்னொரு முறை ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா? சாப்பிடுவதுதான் சரி’’ என்று நினைக்கும். ‘‘உலகத்தில் எது நிரந்தரம். நாளை நாம் உயிருடன் இருக்கப்போவது என்ன நிச்சயம்? அனுபவி!’’ என்று நினைக்கும். ‘‘இதையெல்லாம் சாப்பிடாமல் அப்படி என்ன சாதித்துவிட போகிறோம்’’ என்றும் நினைக்கும். இப்படி, தான் செய்யக்கூடிய செய்கைகளுக்கு பல நியாயங்களை கற்பிக்கும். சரி, அவனுக்கு தீவிரமாக அதை சாப்பிட

வேண்டும் என்ற ஆசை இல்லாதபொழுதும், அவன் ஏன் அதை சாப்பிட்டான் என்றால், உடலில் உள்ள எல்லா அங்கங்களுக்கும் அப்யாசம் உண்டு. அவைகள், சில கார்யங்களை செய்து செய்து பழக்கப்பட்டதால் தானாவே அவற்றை செய்து விடும். இன்னும் புரியும்படி சொல்ல வேண்டுமானால், ஆங்கிலத்தில் ஒரு வார்த்தையைச் சொல்லி அதற்கு என்ன spelling என்று கேட்டால் நமக்கு உடனே சொல்லவராது. ஆனால், ஒரு பேப்பரில் எழுதினோமானால் சரியான spelling வந்து விடும். காரணம், கைகள் அந்த வார்த்தையை பல முறை எழுதியிருப்பதால் அந்த வார்த்தையை எழுத ஆரம்பித்தவுடன் சரியாக எழுதி விடுகின்றது. அதுபோல்தான் மனதில் ஆசை இல்லாதபொழுதும் அந்த பாதாம் அல்வாவை பார்த்தவுடன் அவனுடைய கைகள் பழக்கத்தினால் தானாக வாயில் எடுத்துப் போட்டுக்கொள்ள ஆரம்பித்துவிடுகின்றது.

உதாரணத்திற்காக பாதாம் அல்வா என்று எடுத்துக் கொண்டோமே தவிர, இது மனதில் நமக்கு இருக்கும் ஒவ்வொரு ஆசைக்கும் பொருந்தும். எந்த ஒரு ஆசையிலிருந்து நாம் விடுபட நினைக்கின்றோமோ, அது சம்பந்தப்பட்ட பொருளிலிருந்து சில காலம் சுயகட்டுப்பாட்டுடன், தீவிரமாக, கஷ்டமாக இருந்த போதிலும், பல்லைக் கடித்துக்கொண்டு விலகியிருந்தால் காலக் கிரமத்தில் அதிலிருந்து நாம் விடுபட்டு விடலாம். இது ஒன்றுதான் அதற்கு வழி.

## அறிவிப்பு

1. மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

   **''மதுரமுரளி''**, குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

2. மதுரமுரளி விஷயமாகவும், மிஷன் வெளியீடுகள், VCD, CD, கேசட்கள் விஷயமாகவும் e-mail அனுப்ப விரும்புபவர்கள் "publications@madhuramurali.org" என்ற e-mail IDக்கு அனுப்பவும்.

## மாலே மணிவண்ணா - 19

– மஹாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

எம்பெருமானே! நீ பெற்றவளது துன்பத்தைப் போக்கிய பறவையாகிய கருடனை வாகனமாக உடையாய்! தன் தாயின் துயரம் போக்கியவனுக்கு எப்பொழுதும் உன் திருவடி சம்பந்தத்தைப் பெறுகின்ற ஊர்தியாகப் பேரருள் புரிந்தவன் நீ!

பெற்றவளாகிய தேவகிக்கும் வளர்த்தவளாகிய யசோதைக்கும் கம்சனால் வந்த, வர இருக்கின்ற துன்பங்களைத் துடைத்தவன் அல்லவா நீ. இதையே,

*'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்*
*ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்*
*தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த*
*கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்*
*நெருப்பென்ன நின்ற நெடுமால்'*

என்று திருப்பாவையில் ஆண்டாள் அற்புதமாகச் சொன்னாள். தன் தாயால் சுட்டவும் எட்டவும் கட்டவும் தன்னை ஆளாக்கிக்கொண்டு 'கயிறு வயிறு' என்ற அந்த நிகழ்ச்சியை இன்றும் உலகுக்கு அறிவுறுத்தித் தாய்க்கும் தனக்கும் உள்ள அன்புப் பெருக்கைக் காட்டுமாப்போலே 'தாமோதரன்' என்ற திருநாமத்தையும் உடையவனாக ஆனான்.

நம் கண்கண்ட முதல் தெய்வம் தாய் அல்லவா? 'மாதா பிதா தம்முன், அரசன், குரு' என்று ஐம்பெருங்குரவர்கள் வரிசையில் முதலில் வைத்து எண்ணப்படுபவர் தாய் அல்லவா! தாயை வணங்குகிறவர்கள் தன்னையே வணங்குகிறவர்களாய்ப் பகவான் நினைக்கிறான். அவன் 'தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரன்' ஆனவன். தாயின்பால் அன்பு கொண்டவர்களுக்கு, தாயின் துன்பத்தை நீக்குகிறவர்களுக்குத் தன் திருவடி சம்பந்தத்தை இடையறாது அனுபவிக்கும்படி தன் ஊர்தியாக, வாகனமாகத் தன்பால் எப்பொழுதும் வைத்துக்கொள்கிறான். அதனால் எம்பெருமான் திருவடியை எப்பொழுதும் சுமக்கின்றபடியால் அவர் 'பெரிய திருவடி' என்னும் திருநாமத்தையும் பெற்றார். அதுமட்டும் அல்ல, எம்பெருமான்

இருப்பிடத்தை உலகிற்கு அறிமுகம் செய்வதற்கும் அவரே தக்கவர் என்று எம்பெருமான் நினைத்தார் போலும். அவரையே தன் கொடிமேல் இருக்கும்படிப் பணித்தார். பெற்றவன் துன்பம் துடைத்த கருடாழ்வாருக்குத்தான் எப்படிப்பட்ட பேறுகள் கிடைத்துள்ளன என்று அடுத்து ஆச்சரியப்படுகிறார்.

பகவத்சம்பந்தம் உங்களுக்கு வேண்டுமானால் உங்கள் தாயை நேசியுங்கள்; தாய், தந்தை துன்பப்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அப்படியிருந்தால் பகவானுடைய பரிபூரணமான கருணைக்கு நீங்கள் இலக்காகிவிடுவீர்கள் என்று உலகிற்குச் சொல்கிறார் பரிபாடல் ஆசிரியர்.

பகவானுடைய திருவடி சம்பந்தமே அன்றி பகவானுக்கு மேலாக நிற்கவும் தாயின் துன்பம் துடைத்தவர்களுக்கு அருள் செய்கிறார் என்பதுதான் 'கருடத்வஜ:' என்னும் ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தின் கருத்தாகும்.

கருடன் தன் தாயின் விடுதலைக்காக அம்ருதம் கொணர்ந்த போது நாராயணனிடம் அவருக்கு மேல் நிற்க வரம் கேட்கக் கொடியாக மேல் நிற்கவும் வாகனமாகத் தன் திருவடிக்குக்கீழ் நிற்கவும் நாராயணன் வரம் தந்தார் என்பது பாரதம் ஆதிபர்வத்தில் கூறப்பட்ட செய்தி. அதன்படி எப்போதும் கருடனைத் தன் கொடியில் அடையாளமாகக் கொண்டார். தன் தாயிடம் அன்பு செய்து துன்பம் துடைத்த கருடனுக்குத் தன்னைத் தந்து அவன் மேலும் கீழுமாக நிற்க அவனுக்குள்ளே தன்னைச் சிறைவைத்து தாயன்புக்குக் கட்டுப்படும் பரம காருண்ணியத்தை இங்கே காட்டினார் பெருமான்.

தக்ஷப்ரஜாபதியின் குமாரிகள் பதின்மூவரை மணந்தார் காசிபர். அவர் மூலம் உலகப்படைப்பு நிகழ்ந்தது. காசிபர் மனைவியருள் விநதை, கத்துரு என்ற இருவரும் கடைசிச் சகோதரிகள், விநதையின் பிள்ளைகள் கருடன், அருணன், சடாயு, சம்பாதி, சேனன் முதலியோர். கத்துருவின் பிள்ளைகள் நாகர்கள். 104 நாகர்களையும் ஒரு பெண்ணையும் பெற்றாள் கத்துரு.

எப்பொழுதும் தன் தமக்கையின்மேல் பொறாமை கொண்டு வாதம் செய்பவள் கத்துரு. பாற்கடலில் தோன்றி இந்திரனுக்கு உரியதாய் இருந்த உச்சைச் சிரவம் என்னும் குதிரையின் வால்

வெள்ளையாய் இருப்பது என்றாள் விநதை. கத்துருவோ வால் கறுப்பு மறு உடையது என்று வேண்டுமென்றே மாறுபட்டுப் பேசினாள். வென்றவர்க்கு தோற்பவர் அடிமையாவது என்று பந்தயம் கட்டினர். கத்துரு தன் பிள்ளைகளில் ஒருவனாகிய கரிய நாகரை குதிரையின் வாலில் சுற்றிக்கொண்டு மறுவாகத் தோன்றச் செய்து விநதையை வென்று அடிமைகொண்டாள்.

விநதையின் அடிமை நீங்கவேண்டி கத்துருவின் கட்டளைப்படி இந்திரலோகத்தில் தேவர்களால் காப்பாற்றப்படும் அமுதத்தை நாகர்களுக்குக் கொண்டு செல்ல கருடன் முயற்சி செய்தான். அதுகண்டு அமுதத்தைக் காவல் செய்திருந்த அமரர்களை எதிர்த்து, அமுதத்தைப் பிடுங்கிக்கொண்டான். இந்திரன் வச்சிராயுதத்தை எறிந்தான். அந்த ஆயுதத்துக்கு மதிப்புத் தரும் வகையில் தன் சிறகுகளில் ஒன்றை கருடன் தந்தான். இதனால் இந்திரனுக்கு கருடன்பால் நட்பு ஏற்பட்டது. என் தாயின் அடிமையை நீக்க இந்த அமுத கலசத்தை நாகர்களுக்குக் கொண்டு செல்கிறேன். பிறகு நீங்கள் மீட்டுக்கொள்க என்று இந்திரனிடம் கூறி, அமுதத்தைக் கொண்டுசென்று நாகர்களிடம் கொடுத்து தன் தாய் விநதையின் அடிமையை நீக்கினான் கருடன். (பிறகு இந்திரன் நாகர்களோடு போரிட்டு அமுதகலசத்தை மீட்டது வேறு கதை). இவ்வாறு தன் தாயின் அடிமையை நீக்கியதால் எம்பெருமான் மனம் மகிழ்ந்து அவனை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டு ஏற்றம் அளித்தார் என்கின்ற சிறப்பை இங்கே சொல்கிறார் பரிபாடல் ஆசிரியர்.

அழகிய ஒளிவிளங்கும் ஆபரணங்களைஅணிந்த தேவர்களை ஒட்டி அவர்களால் பாதுகாக்கப்பெற்ற அமுதத்தைக் கைப்பற்றித் தன்னைப் பெற்ற தாயின் அடிமைத் துன்பத்தை நீக்கிய கருடனாகிய பறவையை வாகனமாக உடையாய்!

பெற்றவள் துன்பம் நீக்கிய அக்கருடசேவையை எழுதிய மிக உயர்ந்த கொடியினை உடையாய்! எம்பெருமானே! நின் சேவடியை வணங்காதவர்களும் இவ்வீரேழுலகங்களிலும் இருக்கிறார்களோ? இதற்குக் காரணம் கூறுகிறோம்.

நீ வாமனாவதாரத்தில் நிலத்தை மாவலியால் யாசித்துப் பெற்று பின்னர் திருவிக்கிரமனாகி உலகை அளந்த காலத்து உன் திருவடி கீழ் ஏழுலகும் சிறிதும் விடுபடாதபடி சென்று அளந்து எல்லா இடத்தும் பட்டதல்லவா?

கீழ் ஏழுலகத்திலும்கூட திருவடி பட்டது என்றபடியால் மேலும் நடுவுமாகிய மற்ற பதினான்கு உலகிலும் திருவடிபடுதல் சொல்லவேண்டாதாயிற்று. இதனையே திருவள்ளுவரும்,

*''மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்*
*தாஅய தெல்லாம் ஒருங்கு''* என்ற குறளில்

சோம்பல் இல்லாத அரசன் திருமால் தன் திருவடியால் தாவி அளந்த உலகம் எல்லாவற்றையும் அடைவான் என்று இவ் அவதார சீலத்தை நினைந்து மகிழ்ந்தார்.

இளங்கோவடிகளோ,

*''மூவுலகும் ஈரடியால் முறை*
*நிரம்பா வகைமுடியத் தாவிய சேவடி''*

என்று எம்பெருமானின் திருவடிப் பெருமையைச் சொல்லி ஆராதிக்கிறார்.

ஆழ்வார்கள் அவதரிப்பதற்கு நெடுங்காலம் முன்னரே திருமாலின் அவதார சீலங்கள் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் அற்புதமாகப் போற்றப்பட்டுள்ளமையை இங்கு அறிந்து மகிழலாம்.

இந்த பரிபாடல் பகுதி,

*''ஏஎர் வயங்கு பூண் அமரரை வௌவிய அமிழ்தின்*
*பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை;*
*பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளின்*
*நிவந்து ஓங்கு உயர்கொடிச் சேவலோய் நின்*
*சேவடி தொழாரும் உளரோ? அவற்றுள்*
*கீழ் ஏழ் உலகமும் முற்ற அடியினை*

(குறிப்புரை : ஏஎர் - அழகு, வயங்கு - விளங்குகின்ற, பூண் - ஆபரணம், அமரரை ஒட்டி வௌவிய - காத்திருந்த அமரரிடத்திருந்து பிடுங்கிய எனலும் ஆகும். இப்பொருளில் ஏழாம் வேற்றுமைக்கண் இரண்டாவது வந்தது உருபு மயக்கம். இடுக்கண் - துன்பம், புள்ளினை - புள்ளை ஊர்தியாக உடையாய். நிவந்து, ஓங்கு, உயர் என்பன ஒருபொருள் பன்மொழி. மிக உயர்ந்த என்பது பொருள்.

உளரோ? என்றது சேவடி தொழாதவர்கள் ஒருவரும் இலர் என்றதாகக் கொள்க).

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 20

ஸ்ரீ ப்ரியாசரண்பாபாவின் பிறப்பு பீஹாரிலுள்ள பக்ஸர் மாவட்டத்தைச் சேர்ந்த ஸின்ஹரா என்ற கிராமத்தில் ஏற்பட்டது. அவரது முன்னோர்கள், ''கான்யகுப்ஜ சதுர்வேதி'' என்ற குலத்தவர்கள். அன்னை, தந்தை இருவருமே பரம வைஷ்ணவர்கள். ஆனதால், அவருக்கு வைஷ்ணவ ஸம்ஸ்காரம் பிறவியிலேயே இருந்தது. அன்னையின் ஹரிபக்தியின் பாதிப்பு அவரிடம் நிறைய ஏற்பட்டது. அவரது தாய் பரமவைஷ்ணவியாகவும் பண்டிதையாகவும் இருந்தாள்.

ப்ரியாசரண், வித்யாப்பியாசத்திற்காக வாரணாசிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மிகவும் புத்திசாலியான அவர் விரைவில் பண்டிதனாக மாறினார். மேலும், வாரணாசியின் சூழ்நிலை அவரது பக்தி வளர்வதற்கு அனுகூலமாக இருந்தது. அவருக்கு ஸ்ரீமத் பாகவதம் மிகவும் பிடிக்கும். எங்கெல்லாம் பாகவத பாராயணம் நடக்கிறதோ அங்கு சென்று விடுவார். ஸந்த் மஹாத்மாக்காளுடன் ஸங்கம் வைத்துக்கொள்வார். மஹாத்மா ஸ்ரீச்யாமதாஸ்தேவர் என்ற நிம்பார்க்க ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மஹராஜிடம் அவர் தீக்ஷை பெற்றார். பிறகு தீவிரமாக பக்தி மார்க்கத்தில் ப்ரவேசித்தார்.

அவரது பக்தி**பா**வம் தீவிரமாகி ஏகாந்தமாக ஸஞ்சாரம் செய்யுமளவிற்கு முதிர்ச்சி அடையவில்லை. அவர், பதினாறே வயது நிரம்பியவராக இருந்தார். யௌவன கனவுகளும், ஆசைகளும் அவரை அலைக்கழித்தன. கல்வியிலும், உடற்பயிற்சியிலும், குஸ்தி சண்டையிடுவதிலும் அவருக்கு தீவிர விருப்பமும் இருந்தது. ப்ரியாசரணுக்கு வீட்டைத் துறந்து தீவிர சாதகனாக வேண்டும் என்ற வேகம் ஏற்படவில்லை. பக்தி செய்யும் நேரங்களில்தான் வீடு, குடும்பம் ஆகியவற்றைத் துறந்து ப்ருந்தாவனத்தில் செடி கொடிகளுடன் அமர்ந்து தனது இஷ்ட தெய்வங்களான ராதக்ருஷ்ண யுகளத்தின் லீலைகளை கண்டு ஆனந்திப்பது போல கனவு காண்பான். ஆனால், அவனுடைய இந்தக் கனவு எந்தவித பிரயாசையுமின்றி நனவாகும் என்று அவன் சிறிதுகூட கற்பனை செய்யவில்லலை!

ஆனால், நடந்ததென்னவோ அப்படியேதான்! பள்ளி விடுமுறை நாட்களில் ப்ருந்தாவனத்திற்கு லீலாஸ்தலங்களை கண்டுகளிக்கவும், மஹான்களின் தரிசனம் பெறவும் ப்ரியாசரண் சென்றான். ஆனால், அங்கு சென்றதும், மஹான்களாலும், ப்ருந்தா தேவியாலும் பிடிபட்டுவிட்டான். நாமாக, ப்ருந்தாவனத்தைப் பிடித்துக்கொண்டால்கூட அதை நழுவ விட்டுவிடுவோம்; ஆனால், ப்ருந்தாவனம் நம்மைப் பிடித்துக்கொண்டால் ஒருபோதும் நம்மை விடாது.

ப்ருந்தாவனம் அடைந்ததும் ப்ரியாசரண் பரமபாகவத பண்டித சிரோமணியான ராமக்ருஷ்ணதாஸ் பாபாஜியை தரிசித்தார். அப்போது பாபா கோவர்த்தனத்தில் சியாமகுபீரத்தில் வசித்து வந்தார். அவரை தரிசித்ததும் ப்ரியாசரணுக்கு ஏதோ அபூர்வமான நிதி தனக்கு கிடைத்ததுபோல் தோன்றியது. ராமக்ருஷ்ணதாஸ் பாபாவிற்கு ப்ரியாசரண் ஒரு மஹாபுருஷன் என்று தெரிந்துவிட்டது. அவரால் எதிர்காலத்தில் சகல மக்களுக்கும் நன்மை ஏற்படும் என்று தெரிந்துகொண்டார். தனது ப்ரேமையை ப்ரியாசரண்மீது வர்ஷித்தார். அதில் சிக்குண்ட ப்ரியாசரண் அவரால் விலைக்கு வாங்கப்பட்ட தாஸனைப் போலகி அவரிடமே தங்கிவிட்டான். மஹான்களின் சுயநலமற்ற ப்ரேமையின் ப்ரபாவம் இப்படித்தான் இருக்கும்!

ப்ரியாசரண், பண்டித் ராமக்ருஷ்ணபாபாவின் பொறுப்பில் இருந்துகொண்டு அவரது ஆக்ஞைபடி பஜனை செய்து வந்தார். கௌடீய சம்பரதாயத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணதாஸ்பாபா அனைத்து சம்ப்ராதயங்களையும் நன்கறிந்தவராதலால் ப்ரியாசரணுக்கு நிம்பார்க்க சம்ப்ராதய பஜனையும், மற்ற பத்ததி பஜனையும் கற்றுத் தந்தார். கூடவே, ஸதாசாரத்தையும் வைராக்யத்தையும் அன்புடன் போதித்து ப்ரியாசரணை தர்மபுத்ரரைப் போன்று நன்னடத்தை உள்ளவனாக உருவாக்கினார். இது சம்பந்தமாக ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

ஒருமுறை பண்டித பாபா, ப்ரியாசரண், கௌராங்தாஸ் பாபா போன்ற அனேக ஸாதுக்கள் ஒன்றாக மாதுகரிக்கு கிளம்பினார்கள். நிறைய வீடுகளுக்குச் சென்றும் ஒன்றும் பிக்ஷை கிடைக்கவில்லை. இது மிகவும் அசாதாரணமான நிகழ்ச்சி. ஏனென்றால் பண்டித்பாபாவுக்கு பிக்ஷையிட வ்ரஜவாசிகள் போட்டிபோட்டுக் கொண்டு முன்வருவார்கள். யாருக்கும் இதன் காரணம் புரியவில்லை. ஆனால், பாபா தனது

திவ்ய த்ருஷ்டியால் காரணத்தை அறிந்துகொண்டார். ''சரி! இப்போது யார் யாரிடம் என்னென்ன இருக்கின்றது என்று சொல்லுங்கள்'' என்றார் பாபா. ஒரு ஸாது, ''என்னிடம் ஏழு ரூபாய்கள் உள்ளன'' என்றார் பாபா ''இதுதான் காரணம், இன்று நமக்கு பிக்ஷை கிடைக்கவில்லை. நாம் பூரணமாக சரணமடைந்தால்தான் ப்ரபு நமது யோக க்ஷேமத்தை வஹிப்பான். அவனது ஆச்ரயத்தை விட்டு நாம் புத்தி பலத்தை ஆச்ரயித்தால் அவனும் தன் கையை பின்னால் இழுத்துக்கொண்டு விடுவான்'' என்றார். அன்றிலிருந்து ப்ரியாசரண் பணத்தைக் கையால் தொடுவதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டார்.

ப்ரியாசரண், பண்டித்பாபாவின் ஆக்ஞையை மேற்கொண்டு கோபால மந்திர ஜபம் செய்ய ஆரம்பித்தார். அனுஷ்டானம் ஆரம்பித்து பத்து தினங்கள் ஆன உடனேயே அவரிடம் ஒரு விசேஷ சக்தி சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது. இதனால், அவருக்கு கண்ணுக்குப் புலப்படாத வஸ்துக்களைப் பற்றிய விவரம் தெரிய ஆரம்பித்தது. பின்னால் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளின் விவரங்கள் ஸ்புரிக்க ஆரம்பித்தது. பாபாவிடம் சென்று இதுபற்றி ப்ரியாசரண் கூறியதும், அவர் ''கோபால மந்திர அனுஷ்டானத்தை நிறுத்தி விடு வெறும் ஹரிநாம ஜபம் செய்போதும். மந்திரங்களால் காமனைகள் ஸித்தியாகும்.நாம ஜபத்தால் காமனைகள் அழிந்துவிடும்'' என்றார். ப்ரியாசரண் அதைக்கேட்டு மந்திரத்தை விட்டு நாம ஜபம் செய்ய ஆரம்பித்தார். பண்டிதபாபாவின் சிஷ்யனாக இருந்துகொண்டு ப்ரியாசரண் அனைத்து சம்ப்ரதாயங்களையும் கற்றுத் தேர்ந்து சிறந்த உபன்யாஸகராக மாறினார். அவரது சொற்பொழிவைக் கேட்டவர்கள் ஆனந்தமடைந்தனர். அனைத்து சம்ப்ராதயங்களிலும் அவருக்குள்ள தேர்ச்சியைக் கண்டு வியந்தனர்.

ப்ரியாசரணுக்கு ப்ருந்தாவனத்தில் கொராங்கதாஸ்பாபா என்பவரின் சங்கமும் கிடைத்தது. இருவருமே இளைஞர்கள், இருவரும் வைராக்ய பூர்ணர்கள். இருவரையும், பண்டிதபாபா புத்ரர்களைப் போல ஸ்னேஹத்துடன் நடத்தினார். ப்ரியாசரண்பாபா, வெளிப்படையாக பேசும் குணமுள்ளவர். குற்றம் என்று அவருக்குப்பட்டால் உடனே அதை எடுத்துக் கூறிவிடுவார். சில சமயங்களில் அப்படி அவர் கடுமையாக எடுத்துக் கூறுவதால் பிறருக்கு மனக்கஷ்டம் கூட ஏற்படும். ஆனால், ப்ரியாசரண்பாபாவின்

எண்ணம் என்னவோ பிறரைத் திருத்த வேண்டும் என்பதே தவிர, பிறரை நிந்தை செய்ய வேண்டும் என்பதல்ல.

ஒருமுறை, எங்கிருந்தோ ஒரு ஸாது ப்ருந்தாவனத்திற்கு வந்தார். கதா கீர்த்தனத்தின்போது அவருக்கு கம்பம் (நடுக்கம்) ஏற்பட்டு கண்ணீர் பெருகும். மூர்ச்சை கூட அடைவார். **பா**வ சமாதியில் இருப்பது போல் இருப்பார். எப்போதும் பகவானுடன் பேசுவதுபோல் பேசிக்கொண்டே இருப்பார். இதைக் கண்டு ப்ருந்தாவனத்து மக்களுக்கு அவர்மீது மிகவும் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டு அவருக்கு பெரும் புகழ் சேர்ந்தது. அவரை தரிசிக்க அனேக மஹான்கள் கூட வரலானார். ஸ்ரீ ஹரிபாபா என்பவரும் அவரது ஸங்கத்தினால் பயனடையவிரும்பினார்.

ஸ்ரீ ஹரிபாபா அந்த புதிய ஸாதுவிடம், ''மஹராஜ்! ப்ரபு உங்கள் ஸன்னதியில் எப்போதும் உள்ளான். நீங்கள் க்ருபை கூர்ந்து அவரிடம் என்னால் அவரது தரிசனத்தை எப்படிப் பெற முடியும்? என்று கேட்டுச் சொல்லுங்களேன்'' என்று கேட்டுக்கொண்டார். அதற்கு அந்த ஸாது, ''என்தோழன், நீ 21 நாட்கள் அன்ன ஆகாரமின்றி இருந்தால் அவனது தரிசனம் உனக்கு கிட்டும் என்று சொல்கிறான்'' என்றார். வெகுளியான ஸ்ரீஹரிபாபாவும் இதை ஏற்று உண்ணா விரதத்தை ஆரம்பித்துக்கொண்டார். இந்த விஷயத்தைப்பற்றி கேள்விப்பட்ட ப்ரியாசரண்பாபா உடனே அந்த ஸாதுவை தன்னிடம் அழைத்து வருமாறு பணித்தார்.

புதிய ஸாது ப்ரியாசரண் இருக்குமிடத்திற்கு வந்தார். அவருக்குரிய ஆசனம் அளிக்கப்பட்டு மரியாதையுடன் நடத்தப்பட்டார். ப்ரியாசரண் கூறினார், ''மஹராஜ்! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நானே உங்களைத் தேடி வரவேண்டும். ஆனால், நீங்கள் க்ருபை செய்து என்னைப் பார்க்க சிரமப்பட்டு வந்துள்ளீர்கள்'' என்றார். ''அதெல்லாம் ஒன்றுமில்லை, என் தோழன் அனுமதித்தான் வந்தேன் என்றார் சாது.

ப்ரியாசரண் பஜனை சம்பந்தமாக சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு மெதுவாக ஸாதுவிடம் பலவிதமாக பரீக்ஷை செய்யும் விதங்களில் கேள்விகள் கேட்டார். ''உங்களிடம் பகவான் மிகவும் கிருபை செய்கிறானாமே!'' என்றார். ''ஆமாம், எல்லையில்லா அளவு க்ருபை'' என்றார் சாது.

''உங்களுக்கு அடிக்கடி தரிசனம் தருகிறானாம்! நீங்கள் அவனுடன் பேசுகிறீர்களாமே!'' என்றார் ப்ரியாசரண். ''ஆமாம், அவன் எப்போதும் என்னுடனேதான் இருக்கிறான்'' என்றார் சாது. ப்ரியாசரண், ''இப்போது எங்குள்ளான்? உங்களுடன் இல்லையா?'' என்றார்.

சாது, ''இருக்கிறான். ஆனால், வெளியே நிற்கிறான். நீ பாபாவுடன் போய் பேசிவிட்டு வா. நான் உள்ளே வரவில்லை என்று சொல்லிவிட்டான்'' என்றார்.

உடனே, ப்ரியாசரண் முக**பா**வம் மாறி ஸாதுவிடம் உரத்த குரலில், ''ஆம்! ஆம்! நான் உன்னுடைய தோழனின் எருமையைத் திருடிவிட்டேன் இல்லையா! அதனால், அவன் என்னிடம் கோபமாக உள்ளான். நான் உண்ணாவிரதம் இருந்தால் ப்ரசன்னமாகி எனக்கு தரிசனம் தருவான். இதையெல்லாம்கூட உனக்கு சொன்னான் இல்லையா! துஷ்டா! ப்ருந்தாவனத்து கள்ளம் கபடமறியாத சாதுக்களை ஏமாற்ற வந்தாயா! இங்கிருந்து இந்த க்ஷணமே ஓடிவிடு. இல்லையேல் சபித்துவிடுவேன்'' என்று இரைந்து கத்தினார்.

சாதுவிற்கு வேர்த்துக் கொட்டியது. நடுங்க ஆரம்பித்தார். கண்களை தாழ்த்திக்கொண்டு வெளியே நடக்க ஆரம்பித்தார். அப்போது ப்ரியாசரண், ''நில், நேரே ஹரிபாபாவிடம் போய் அவரது உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லிவிட்டு ப்ருந்தாவனத்தை விட்டு ஓடிப்போ!'' என்றார். அவரும் அப்படியே செய்தார்.

ப்ரியாசரண்பாபாவிற்கு சித்திகள் தேவைப்பட்டபோது அவரிடம் கைகட்டி வேலை செய்யும். அவராக முயற்சி செய்து சித்திகளை ப்ரகாசப்படுத்தமாட்டார். ஆனால், பக்தர்களிடம் அவருக்கு இருந்த ஸஹஜமாக ப்ரேமையினால் அவர்கள் நலன் பொருட்டு தானாகவே சித்திகள் அவரிடம் வெளிப்படும், அப்படித்தான் அவரால், ப்ருந்தாவன மக்களை ஏமாற்ற வந்த போலிசாதுவை இனம் கண்டு கொள்ள முடிந்தது.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 103

நாம் ஒரு பேருந்தில் ஏறி, திருவண்ணாமலைக்குச் சென்று, ரமணாஸ்ரமத்தை தரிசித்து திரும்புகிறோம். நமக்கு ஒன்றும் புதிதாகவோ, வித்யாசமாகவோ தெரிவதில்லை. ஆனால், வாஸ்தவத்தில் திருவண்ணாமலை க்ஷேத்ரத்தில் உள்ள பசு, பக்ஷி, மிருகங்களில் கூட சிவசான்னித்யம் இருக்கிறது. இது மஹாத்மாக்களுக்கே தெரியக்கூடியது. திருவண்ணாமலை, பல தபோதனர்கள் வாழ்ந்த பூமி. தவம் புரிவோர் பலர் இன்றும் இருக்குமிடம்.

இந்த மலையின் மேல் ஒரு முறை பகவான் ரமண மஹரிஷிகள் ஸஞ்சாரம் செய்து வரும் வேளையில், ஒரு பெரிய ஆல இலை அவர் காலின் கீழ் வந்து விழுந்தது. அந்த ஆல இலையோ வாழை இலை அளவு பெரிதாக இருந்தது. இந்த பெரிய ஆல இலை எத்திசையிலிருந்து வந்தது என்று அவர் பார்க்கையிலே, தூரத்தில் வட ஆல வ்ருக்ஷம் அவருக்கு தரிசனம் ஆகிறது. அருகில் ஒரு கல் திண்ணை, அதில் சாக்ஷாத் பரமேஸ்வரன், சித்த புருஷராய் உட்கார்ந்து இருப்பதும் அவருக்கு தெரிகிறது, ரமண மஹரிஷிகள் பின்னர் அருணாசல க்ஷேத்ர புராணத்தை பார்க்கையிலே, அதில் பரமேஸ்வரன் அருணாசல க்ஷேத்ரத்தில் சித்த புருஷனாய் உள்ளான் என்று இருப்பது தெரியவந்தது. புராணங்களில் எழுதி உள்ளது மஹாத்மாக்களுக்கு நிரூபணமாகிறது என்பதற்கு இச்சம்பவமும் ஒரு சான்று. அநேக பக்தர்கள் இதற்குப் பின், அந்த வட ஆல விருக்ஷத்தை பார்க்கக் கிளம்பினர். ஒருவருக்கும் அது தரிசனமாகவில்லை. இச்சம்பவம் ஸ்ரீ ரமண மஹரிஷிகளே சொன்னது.

இம்மலையின்மேல் சித்தர்களின் நடமாட்டம் உண்டு என்பதற்கு ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களே சான்று. ஒரு முறை, ''ஆஸ்ரமத்திலிருந்தால் யாராவது ஏதோ ஒரு ஆகாரம் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்த வண்ணம் உளளனர். இது மிக தொந்தரவாக உள்ளதே'' என்றெண்ணி,

பகவான் ரமண மஹரிஷிகள், மலைமேல் ஸஞ்சாரம் செய்ய, ஒருவரிடமும் சொல்லாமல் கிளம்பிவிட்டார். அச்சமயத்தில், ஸப்த கன்னிகைகள் அங்கு வந்து, அவருக்கு பற்பலவிதமான உணவுவகைகளை பரிமாறிவிட்டு சென்றதாக பகவானே கூறியுள்ளார்.

ஒருமுறை அடிஅண்ணாமலை கோவிலில், ஒரு சீரமைப்பு பணி செய்துகொண்டு இருந்தார்கள். அது சமயம், அவர்களுக்கு சுரங்கம் போன்று ஒன்று தென்பட்டது. அதன் உள்ளே சென்று அதனை சீர் செய்வதா அல்லது அதனை அப்படியே மூடிவிடுவதா என அவர்களுக்கு ஒரு ஐயம். இதற்கு ஒரு முடிவெடுக்க, அவர்கள் ஸ்ரீ ரமண மஹரிஷிகளிடம் வந்து விஷயத்தை தெரிவித்தனர். அது மாலை வேளையானபடியால், பகவானும் நாளை பார்ப்போம் என்று கூறி அனுப்பிவிட்டார்.

அன்றிரவு ஸ்ரீ ரமண மஹரிஷிகளுக்கு ஒரு அற்புத காட்சி. அதில், நிறைய சுனைகளும், புஷ்ப சோலைகளும், ஸ்வர்ணம், வைரம் போன்றவை கொட்டி கிடப்பதாகவும் தோன்றுகிறது. அதை அவர் லக்ஷ்யம் செய்யவில்லை. மறுநாள், கிரிபிரதக்ஷிணம் சென்ற காலத்தில், அடிஅண்ணாமலைக்குச் சென்று அந்த சுரங்கபாதையை பார்த்தபொழுது அவருக்கு ஆச்சர்யம்! ஏனெனில், இரவு கனவில் என்ன காட்சியை கண்டாரோ, அதே காட்சியை அந்த சுரங்கத்திலும் ப்ரத்யக்ஷமாக கண்டார். அருணாசல க்ஷேத்ர புராணத்தில் இதுவும் இருப்பதை பகவான் ரமண மஹரிஷிகள் பின்னர் அறிந்தார். அடி அண்ணாமலை சுரங்கப்பாதையில், (On the Northside of the Mountain) மலையின் வடக்குப்பகுதியில் இவையெல்லாம் இருப்பதாக எழுதி உள்ளது. பகவானும், தான் கண்டதை தமிழில் ஒரு பாட்டாக எழுதி உள்ளார். ஆக, திருவண்ணாமலையை நாம் பார்க்கும் விதம் வேறு; மஹாத்மாக்கள் பார்க்கும் விதம் வேறு.

இப்பேர்ப்பட்ட க்ஷேத்ரங்களுக்கு அடிக்கடி சென்று வருவது மிக்க நன்மையைத் தரும். அப்படி சென்று வந்தால், நமது சித்தம் சுத்தமாகி, அம்மஹாத்மாக்களின் நிலையை நாமும் ஒருநாள் அடைவோம் என்பதில் சந்தேகமில்லை.

ஆதிசங்கரர், தனது கிரந்தமான, ''விவேக சூடாமணியில்'', ''மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ஸ்ரயஹா'' என்கிறார். அதாவது, பலகோடி பிறவிகளுக்குப் பிறகே ஒருவனுக்கு மனித பிறவி கிட்டுகிறது. அது கிடைத்தபின்னும், பலர் பலவிதமாய் வாழ்ந்து வருகின்றனர். அதிலும், யாரோ சிலருக்கே மோக்ஷம் போகவேண்டும் எனும் ஆசை ஏற்படுகிறது. அப்படி மோக்ஷம் போகவேண்டும் எனும் ஆசை வந்தவர்களிலும் ஒரு உத்தமமான ஞானியை குருவாக அடைபவர்கள் மிக மிக சிலரே. அந்த ஞானியும், பகவான் ரமண மஹரிஷிகள் போல் இருந்துவிட்டால், அது பெரும் பாக்கியமே!!

பலகோடி பிறவிகள் எடுத்து, தெய்வீகமான வாழ்க்கைக்கு பலவிதத்திலும் முயற்சி செய்து, தவறான வழியில் சென்று, கஷ்டப்பட்டு, கடைசியில்தான் இப்படி ஒரு உத்தமமான குருவின் ஸங்கத்திற்கு ஓருவன் வருகிறான். அது ஒருவனுக்கு கடைசி பிறவி என்றால்தான் சாத்தியமாகிறது. ஈஸ்வரன்தான் ஒருவனை ஜீவன்முக்தனின் ஸங்கத்திற்கு அழைத்துச் செல்கிறான். ஜீவன்முக்தனை குருவாக அடைந்தவர்கள், இதுவே தங்களின் கடைசி பிறவி என்று முழு நம்பிக்கையோடு இருக்கவேண்டும்.

(தொடரும்)

---

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, பிப்ரவரி 15-ந் தேதி அன்று கடலூர் மாவட்டம் மங்களூர் சென்றார்கள். அன்று, நம்முடைய ஸ்வாமிஜியின் பக்தர் திரு. முருகதாஸ் அவர்கள், ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு விமர்சையான வரவேற்பு கொடுத்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் நகரஸங்கீர்த்தனம் நடைபெற்றது. பிறகு அங்கிருந்து கிளம்பி மலையனூர், M. புதூர், எழுத்தூர், நெக்கூர், வெங்கனூர் முதலான கிராமங்களுக்கு விஜயம் செய்தார்கள். மலையனூரில் திரு. திருநாராயணனும், M. புதூரில் திரு. ராமநாதனும், எழுத்தூரில் திரு. பூமலைகோனாரும், நெக்கூரில் திரு. கோவிந்தசாமியும், வெங்கனூரில் திரு. ஐயம்பெருமாளும் அந்தந்த கிராமங்களில் தீவிரமாக மஹாமந்திர பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

# செய்திகள்

**பிப்ரவரி 23-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை**

வெள்ளக்கோவில், ஸ்ரீ சோழீஸ்வரர் திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை நாம மஹிமையைப் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

**பிப்ரவரி 26-ந் தேதி**

கோவில்பட்டி, ஸ்ரீ சாரதா கல்யாண மண்டபத்தில் மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை நடைபெற்றது. எண்ணற்ற பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரையை ச்ரவணம் செய்தார்கள்.

**பிப்ரவரி 27-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை**

தூத்துக்குடி ஸ்ரீ சங்கர ராமேஸ்வரர் கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் செய்தார்கள், சுமார் 5,000 பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ப்ரவசனத்தைக் கேட்டு ஆனந்தித்தார்கள்.

**மார்ச் 10-ந் தேதி**

செய்யார் அருகில் மாம்பாக்கம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். சுமார், 2000 பக்தர்கள் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு, ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் செய்தார்கள்.

**மார்ச் 14-ந் தேதி**

சென்னை, அடையார், அனந்தபத்மநாபஸ்வாமி திருக்கோயிலில் ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி அனந்த மண்டபத்தில் நடைபெற்ற Tambras சென்னை மாவட்ட மாநாட்டில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**மார்ச் 15, 16 தேதிகள்**

சென்னை மந்தவெளி, ஸ்ரீ குப்புஸ்வாமி, ஸ்ரீமதி பத்மினி குப்புஸ்வாமி தம்பதியினர் க்ருஹத்தில் நடைபெற்ற ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

**மார்ச் 18-ந் தேதி**

108 திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் நான்காவது கோயிலான, மயிலாடுதுறை வட்டம் குத்தாலம் அருகில் மாதிரிமங்களம் ஆதிதிராவிடர் குடியிருப்பிலுள்ள ஸ்ரீ மஹாமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் நடைபெற்றது.

# பகவன்நாமமேளா

2000, 2001 வருடங்களில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஏற்பாடு செய்த ''நாம ஸப்தாஹம்'' அகண்ட ''ஹரே ராம மஹாமந்திர நாமகீர்த்தனம்'' நம் மிஷன் சார்பில், சென்னை, மயிலாப்பூர், R.R. சார்பில் நடைபெற்றது. இந்த நாமஸங்கீர்தனத்தில் பலரும் கலந்துகொண்டார்கள்

இந்த வருடம், மார்ச் 4-ந் தேதி முதல் மார்ச் 10-ந் தேதி வரை சென்னை நங்கநல்லூர், 'ஸ்ரீநிதி ஹாலில்', ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞையின்படி அகண்ட மஹாமந்திர நாமகீர்த்தனம், மழைக்காகவும், உலக மக்களின் க்ஷேமத்திற்காகவும் நடைபெற்றது. இந்த நாமவேள்வியை நங்கநல்லூர், கோகுலம் மண்டலியினர் வெகுசிறப்பாகவும், விமர்சையாகவும் ஏற்பாடு செய்திருந்தார்கள். தினமும், பள்ளிச் சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் மிகுந்த உத்ஸாஹத்துடன் இதில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பகவன்நாமமேளா பூர்த்தி தினத்தன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு, நாம மஹிமையைப் பற்றி அருளுரை வழங்கினார்கள். அன்றைய தினம், பெரும் திரளாக பக்தர்கள் கலந்துகொண்டு, ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் மிகுந்த ஈடுபாட்டுடனும், உத்ஸாஹத்துடனும் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தது பிரமிப்பான காட்சியாக இருந்தது.

இதுபோலவே, கடந்த பிப்ரவரியில், மதுரையில் ஸ்ரீ ராஜு செட்டியார் அவர்கள் ஏற்பாடு செய்த, 48 நாட்களுக்கு, ''யோகி ராம்சுரத்குமார் யோகிராம்சுரத்குமார் யோகிராம்சுரத்குமார் ஜெயகுருராயா'' நாமவேள்வி நடைபெற்றது.

சென்னையில், பிப்ரவரி 6-ந் தேதி முதல் மார்ச் 24-ந் தேதி வரை, 48 நாட்களுக்கு, ''யோகி ராம்சுரத்குமார்...'' நாமவேள்வி அகண்டமாக பல இல்லங்களில் நடைபெற்றது. திரு. கபீர்தாஸ் இதனை திறம்பட Co-ordinate செய்தார். பூர்த்தி நாள், மார்ச் 24-ந் தேதி அன்று திருவண்ணாமலை பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், Justice ஸ்ரீ T.S. அருணாச்சலம் அவர்களின் இல்லத்தில்

அகண்டமாக நடைபெற்றது. இதில், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

பிப்ரவரி 2003-ல் சிவகாசியில் ஸ்ரீமதி உமாசுரேந்திரன் மற்றும் ஸ்ரீமதி வாசுகிஜெயராஜ் மண்டலியினரால் ஒரு வாரம் அகண்ட, ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தனம் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

சென்னை ப்ரேமிகபவனத்தில், பிப்ரவரி 23-ந் தேதி முதல் பிப்ரவரி 29-ந் தேதி வரையிலும், மார்ச் 11-ந் தேதி முதல் மார்ச் 17-ந் தேதி வரையிலும் ஸ்ரீ கிரி அவர்கள் ஏற்பாடு செய்த அகண்ட மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றது.

இவ்வாறாக, மழை வேண்டியும், உலக க்ஷேமத்திற்காகவும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆக்ஞையின்படி, தமிழகமெங்கும், பட்டித் தொட்டிகளெல்லாம், அகண்ட, ''ஹரே ராம...'' மஹாமந்திர நாம கீர்த்தனம் ஒரு ''பகவன்நாமமேளா''வாக நடந்துவருகிறது என்றால் அது மிகையாகாது.

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

| | |
|---|---|
| 02.04.2004<br>மாலை 4 மணி | மயிலாடுதுறை வட்டம், பழைய கூடலூர் கிராமம்<br>ஸ்ரீ காமாக்ஷி அம்பிகா ஸமேத<br>ஸ்ரீ ஏகாம்ரேஸ்வரர் திருக்கோயில்<br>மூன்றாம் ஆண்டு உத்ஸவம் |
| 15.04.2004 | ஏகாதசி |
| 01.05.2004 | ஏகாதசி |

Whatever happens is perfect
because my Father is Perfect

**-Bhagavan Sri YogiRamsuratkumar**

**மங்களானி பவந்து**